**செ. கு. எண்: 276** **நாள்: 07.12.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 7.12.2020

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தலைவருமான திரு. செல்லச்சாமி அவர்கள் உடல்நலக் குறைவால் இன்று (7.12.2020) காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனைஅடைந்தேன்.

திரு. செல்லச்சாமி அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியின் போது, ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர் பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, தொகுதி மக்களின் வளர்ச்சிக்காக உழைத்தவர். தொகுதி மக்களின் அன்பை பெற்றவர்.

திரு. செல்லச்சாமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**